புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில்

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழாவை எழுச்சியோடு கொண்டாடுவோம்!

## மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் அறிக்கை!

புதுக்கோட்டை, ஜூன் 1 –

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழாவை தமிழ்நாடு முதல்வர், கழகத்தலைவர், தளபதி அவர்கள், கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆகியோரது வழிகாட்டுதல்களோடு புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் முழுவதும் எழுச்சியோடு கொண்டாடுவோம் என புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன் அழைப்பு விடுத்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன் தமது அறிக்கையில் கூறியிருப்பதாவது,

“உலகம் முழுவதிலும் தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ்வதற்கும், மூத்த மொழியாம் தமிழ்மொழி செம்மொழி தகுதியைப்பெற்று இன்று பட்டொளி வீசி பறப்பதற்கும் காரணமாயிருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவை தலைமை க்கழகத்தின் வழிகாட்டுதல்களோடு ஜூன் 3ம் தேதி முதல் எழுச்சியோடு கொண்டாடப்படவிருக்கிறது

உலகத்தலைவர்களில் தாம் போட்டியிட்ட இடங்களிலெல்லாம் வெற்றி பெற்ற ஒரே தலைவராய், தமிழ் நாட்டை செதுக்கிய சிற்பியாய் திகழும், ஒப்பாரும் மிக்காரும் இல்லா தலைவராம் கலைஞர் அவர்கள், தமது 14ம் வயதில், திருவாரூரில் தொடங்கிய பொதுவாழ்வு பயணத்தில், எத்தனையோ சாதனைகளை படைத்து உயர்ந்து இருந்திருக்கிறார்.

அப்படிப்பட்ட அந்த மகத்தான தலைவரின் 102வது பிறந்தநாளை, புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் முழுவதிலும் மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர், கிளை மற்றும் வார்டுகள், கழகங்கள் தோறும் கழகக் கொடி ஏற்றியும், பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் சிறப்போடு கொண்டாடுவதோடு, ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள், மாணவ மாணவி களுக்கு கல்வி கற்க உதவிகள் வழங்குதல், விளையாட்டுப் போட்டிகள், இலக்கிய போட்டிகளை நடத்துதல் போன்ற பல்வேறு நிகழ்வுகளை, இந்த வருடம் முழுவதும் நடத்தி கலைஞர் எனும் மாமனிதரின் புகழ் பாடுவோம்.

இவ்வாறு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே. செல்லப்பாண்டியன் தமது அறிக்கையில் கூறி உள்ளார்.








